Intervention 2013, Volume 11, Number 3, Page 366 - 367

# Summaries in Tamil

## ADAPT மாதிரி (model): யுத்தத்திற்குப்பின்னான நிலைமைகளில் மனநலன் மற்றும் உளசமூகத் திட்டங்களுக்கான கருப்பொருள் சட்டவரைபு

*Derrick Silove*

பாரிய யுத்தத்திற்கு முகம்கொடுத்த மக்களுக்கு உதவத் தேவையான மனநலன் மற்றும் உளசமூக இடையீடுகளின் உள்ளடக்கங்கள்பற்றியும் அதற்கான வாய்ப்புகள்பற்றியதுமான உடன்பாடு வளர்ந்துவருகின்றது. யுனுயீவு மாதிரியானது கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை களத்தில் பலப்படுத்தி நிலைநிறுத்த தனித்துவமான கருப்பொருள் சட்டவரைபினைக் கொடுக்கின்றது

**முக்கிய சொற்பதங்கள்:** மனநலன் மற்றும் உளசமூக ஆதரவு, கருப்பொருள் சட்டவரைபு, மனவடு மற்றும் சித்திரவதைக்குப்பின்னான அபிவிருத்தியும் நிலைமைக்கேற்ற மாற்றமும் மாதிரி (ADAPT)

---

## யுத்தத்திற்குப்பின் மனநலசேவைகளைக் கட்டியெழுப்பல்: பொஸ்னியா கேர்சிகோவினாவிற்கான சுவீடிஸ் ஆதரவு

*Bengt Lagerkvist, Nermana Mehic-Basara, Ismet Ceric & Lars Jacobsson*

பொஸ்னியாவில் யுத்தத்திற்குப்பின் சுவீடனின் நிபுணர்கள் குழுவொன்று மனநலனை முன்னேற்றும் திட்டம் ஒன்றின்பபுதியான சமூக மனநோயியல் மற்றும் சமூகப்பணிபற்றிய பயிற்சியினை ஒழுங்குசெய்து ஆதரவழித்தது. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் சுகாதார அமைச்சுடன் நெருங்கிப்பணியாற்றுதல், தனிநபர்கள் திட்டத்தில் தொடர்ந்திருத்தல், அறிவுப்பகிர்வு மற்றும் நீண்டகால ஈடுபாடு என்பனவாகும். திட்டத்தின் அனுசரணையுடன் சமூக மனநல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர்: ஒரு மனநோயியல் வைத்தியர், 4 தாதிகள், ஒரு உளவியலாளர் மற்றும் ஒரு சமூகப்பணியாளர். இவர்கள் அண்ணளவாக 65000பேருக்கு சேவைகளை வளங்கினார்கள், ஒரு நாளில் 25- 30 எல்லாவயதினையுடைய நோயாளர்களை பார்வையிட்டனர். இந்த நோயாளர்களில் 75% மானவர்கள் மனநோய்ப் பிரச்சனையுடையவர்கள். பயிற்றப்பட்டவர்களில் சமூகமனநாயியல்சார் மனநோக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. பயிற்சியின் விளைவாக உள்ளூர் தொழில்வாண்மையுடையோர் மத்தியில் ஒரு நட்பு வலையமைப்பு ஏற்பட்டது. 4 வருடங்களின் பின் திட்டம் முடிவடைந்தபின் நடாத்தப்பட்ட மதிப்பீடு பிராந்தியத்தில் சமூக மனநோயியல் நிலையங்களே மனநோயியல் சேவைகள் வழங்கியதிலில் பாரியளவில் ஈடுபட்டன எனக்காட்டியது.

**முக்கிய சொற்பதங்கள்** : பொஸ்னியா கேர்சிகொவினா, பயிற்சி, சமூக மனநோயியல் , சமூகப்பணி, யுத்தத்திற்குப்பின்

---

## சிரலியோனில் மனநல ஆழுமைவிருத்தி: கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் எழுப்பப்பட்ட விடயங்கள்.

*Jane Shackman & Brian K. Price*

மிகக்கொடூரமான பத்துவருட நீண்டகால யுத்தத்தின்பின் சிரலியோன் ஒரு மீண்டெழும் நிலையில் இருக்கின்றது. கூடுதலானதும் நீண்டகாலத்திற்குமான மனநலசேவைக்கான தேவையிருப்பினும், அவ்வாறான வளங்கள் அரிதாகவே இருக்கின்றன. மனநல ஆழுமைவிருத்தி தேவை. மேற்காணும் விடயங்கள் உள்ளடங்கலாக: மனநோய்பற்றியும் சிகிச்சைபற்றியும் சமூகத்தினை உணர்தன்மையாக்கல், சுகாதார நிபுணர்கள் மற்றும் சாதாரண மக்களைப் பயிற்றுவித்தல், தேசிய மனநலக் கொள்கையில் மாற்றத்திற்கான பரப்புரை, மற்றும் மனநல சேவைகள் வழங்கல். இந்த விடயங்களுக்கு முகம்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட வடக்கு சிரலியோனில் சமூக மனநல ஆழுமைவிருத்தித் திட்டமொன்றில் இக்கட்டுரை எழுத்தாளர்கள்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

இரண்டுவருடங்கள் (2010-2012) பணியாற்றினார்கள். திட்ட இறுதி மதிப்பீட்டிற்கு அனுசரணையாக வெவ்வேறு நிறுவனங்கள், பங்குதாரர்களுக்கிடையில் ஒரு கற்கை மேற்கொள்ளப்பட்டது. கற்கையின் விளைவுகள் நாட்டில் மனநல சேவையினை வழங்குவதிலுள்ள பெரும் சவால்களை விளங்கவைத்தன. அத்துடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், சவால்கள் சிரலியோனிலுள்ள இதேபோன்ற மற்றய திட்டங்களுக்கும் ஏனை குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளிலுள்ள இதுபோன்ற திட்டங்களுக்கும் பொருந்தலாம் போன்று காணப்பட்டன.

**முக்கிய சொற்பதங்கள்:** சிரலியோன், மனநல ஆழுமை விருத்தி, மதிப்பீடு, நிலைத்தன்மை

---

## விசேட நோக்கு: சிரியா

இச் சஞ்சிகையில் சிரியாவின் மனநலன் மற்றும் உளசமூக ஆதரவு பற்றிய 6 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2003 ல் சதாம் உசைன் இன் ஆட்சி வீழ்ந்த பின்னர் தொடர்ந்து வந்த சிவில் யுத்தத்தால் ஆயிரக்கணக்கான ஈராக்கிய அகதிகள் அண்டை நாடும் பாதுகாப்பான சொர்க்கமுமான சிரியாவிற்குச் சென்றனர். எனினும் கடந்த 2 வருடமான உலகின் அகதிகளுக்குத் தஞ்சமளிப்பதில் 3 ஆவது பெரிய நாடு என்பதிலிருந்து அகதிகளை உருவாக்குவதில் முதலாவதாகிவிட்டது. இந்த நோக்கு அம் மாற்றத்தைப் பற்றியதாகும்.

இப் பகுதியின் ஆரம்பத்தில் Constanze Quosh, Liyam Eloul & Rawan Ajlani ஆகியோர் முறையாகச் செய்த மனநலன் உளசமூக ஆதரவு மற்றும் சிரியாவின் சிவிலியன்கள், அகதிகளின் மனநலன் வரைபு பற்றிய எழுத்தாக்கங்களின் ஆராய்ச்சிக் கட்டுரை இடம்பெறுகிறது. இந்த மீழ்பார்வை இரண்டு காலப்பகுதிகளை அடக்கியது: 2006 ல் ஆரம்பமான மிகச் சிக்கலான அகதிகள் அவசரகால நிலை, மற்றும், 2001ல் ஆரம்பித்து தற்போது வரை நிலவும் உள்நாட்டு இடம்பெயர்வு அவசரகால நிலை என்பவை ஆகும். இரண்டாவது கட்டுரையில், 2006ல் பெருமளவில் ஈராக்கிய அகதிகள் சிரியாவிற்கு வர ஆரம்பித்த போது ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனித்துமான மனநலன் மற்றும் உளசமூக ஆதரவுச் செயற்திட்டம் பற்றி UNHCR ல் வேலை செய்த Constanze Quosh குறிப்பிடுகிறார். இந்தக் கட்டுரையின் நோக்கங்கள் 1) டமஸ்கஸில் அகதிகளுக்காக இருந்த மனநலன், உளசமூக ஆதரவு செயற்திட்டங்களின் ஒரு சுருக்கத்தை வழங்குதல். இச் செயற்திட்ட அறிமுறை சட்டவரைபிற்கு அமைவானது. இது இப் புத்தகத்தின் வேறொரு பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் உள்ள ஈராக்கிய அகதிப் பெண்களுடன் மிகவும் ஆபத்து நிலையிலுள்ளவர்களைக் கண்டுபடிக்கும் நோக்கில் செய்யப்பட்ட ஒரு செயற்திட்டத்தைப்பற்றி சிரியாவின் UNHCR ல் வேலை செய்யத Zahra Mirghani விபரிக்கிறார். இந்தப் பெண்கள் 6000ற்கும் மேற்பட்ட அகதிகளுடன் ஒவ்வொரு மாதமும் வேலை செய்தனர். இதன் மூலம் அகதிகளுக்கும் இப் பெண்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டது.

Maha Ismael, ஈராக்கிலிருந்து சிரியாவிற்குத் தப்பி ஓடிய ஒரு உளவியலாளர். இவர் அகதிகளுக்கான உளசமூகத் தட்டத்தில் தொண்டராக் பணியாற்றிய தனது அனுபவம் பற்றிக் கூறுகிறார்.

வேறொரு சுய அனுபவத் தொகுப்பில் UNHCR ல் செயற்திட்ட மேற்பார்வையாளராகப் பணிபுரிந்த உளவியலாளர் Maha Ismael சமூகத்தில் உளசமூக ஆதரவு மற்றும் உளவளத்துணை நிலையங்களின் முக்கித்துவம் பற்றிக் கூறுகிறார்.

இறுதியாக, சிரியாவில் வெவ்வேறு நிறுவனங்களுக்கு வேலை செய்த Liyam Eloul, Constanze Quosh, Rawan Ajlani, Naira Avetisyan, Mouta Barakat, Lidia Barakat, Mohammad Waleed Ikram, Louay Shammas & Victoria Diekkamp அனைவரும் தற்போதய சிக்கல் நிலையை நோக்குகின்றனர். சிரியாவிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் உள்கட்டுமானம், வளங்கள் என்பவை எவ்வாறு இடம் மாறிவருகின்றன என்று ஆராய்கிறார்கள்.

**முக்கிய சொற்பதங்கள்:** மனநலன் மற்றும் உளசமூக ஆதரவு, ஒருங்கிணைப்பு, அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், சிறியா, ஈராக், தொண்டர்கள், சமூக ஆதரவு, நகர்ப்புற அகதிகள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.